*24*

# சபையின் விரிவாக்கம்

## *யூதேயா மற்றும் சமாரியா முழுவதிலும் மற்றும் புறஜாதியாருக்கு மாற்றப்படுதல், கி.பி. 35-45*
## *அப். 8-12*

***1. சமாரியாவுக்கு விரிவாக்கம்*** *(8:1-25).*—"எருசலேமில் தொடங்கி" (லூக். 24:47) என்பது நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொழுது பிரதான கட்டளையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விலகிச் செல்லும் புவியியல் கோடுகளைப் பின்பற்ற வேண்டிய வேளையாக உள்ளது (அப். 1:8). ஆனால் மனிதர்களின் அமளியினால் வற்புறுத்தப்படும் வரையிலும், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதுள்ளது; மனிதருடைய திட்டங்கள் தெய்வீகத் திட்டங்களுடன் உட்பிணைக்கப்பட்டுள்ளமைக்க இது இன்னுமொரு எடுத்துக்காட்டாக உள்ளது. ஸ்தேவானுடைய மரணம் அவரைக் கொலை செய்தவர்களின் தாகத்தைத் தணிக்கவில்லை. அது புலிக்கு இரத்தத்தின் ருசி போன்றதாகவே இருந்தது. முந்திய உபத்திரவங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இப்பொழுதோ பரிசேயரும், சதுசேயரும், ஆசாரியரும், மக்களும் பச்சிளம் குழந்தையின் நிலையில் இருந்த சபைக்கு(எதிராக)த் திரும்பினர். ஆனால் அதன் செயல்விளைவானது சுவிசேஷத்தின் கனல்களை அவிப்பதாயிராமல், புதிய மையங்களை அவர்களுக்கு (சீஷர்களுக்கு) கிளறி விடுவதாயிருந்தது. அப்போஸ்தலர்கள் மாத்திரம் எருசலேமில் தங்கியிருந்தார்கள். சிதறடிக்கப்பட்ட சீஷர்கள் அதிகமான சுவிசேஷகர்களாகி, யூதேயா மற்றும் சாமாரியா முழுவதிலும் பிரசங்கித்தார்கள். அவர்களில் ஒரே ஒருவருடைய பிரயாசங்கள் மட்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஏழு உதவிக்காரர்களில் ஒருவரான பிலிப்பு சமாரியாவுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார். அறுநூறு ஆண்டுகள் அளவாக, சமாரியர்கள் ஒரு தனி வகையான மக்களாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அதில் ஒரு அருளிரக்கம் இருந்தது. அவர்கள் யூதராகவோ அல்லது புறஜாதியாராகவோ இல்லாமல், (அவர்களில்) ஒருவர் பிறரிடமிருந்து பாதித் தொலைவில் இருந்த இனமாய்க் காணப்பட்டனர். பிலிப்புவின் ஊழியத்தில் ஏறக்குறைய பெந்தெகொஸ்தே நாளின்[1] அற்புத செயல் விளக்கங்கள் காணப்பட்டன; அந்தப் பகுதியில் (ஏற்கனவே) பெயர் அறியப்படாத ஒரு பெண்ணும், அவளது ஊர் மனிதர்களில் பலரும் இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தனர், இப்பொழுது இயேசுவின் சீஷர்களில் ஒருவரால் அறிவிக்கப்பட்ட முழுமையான சுவிசேஷத்தைத் திரளான கூட்டத்தார் மகிழ்வுடன் ஏற்றுக்

கொண்டனர். மனமாற்றம் அடைந்தவர்களில், கெட்ட பெயர் கொண்டிருந்த மந்திரவாதியான சீமோன் என்பவரும் இருந்தார். பிலிப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், அற்புதங்களைச் செய்யவும் முடிந்திருந்தது, ஆனால் அவரால் ஆவியான வரின் இயற்கைக்கு மேலான அருள் வரங்களைப் பிறருக்குப் பொழியக் கூடாதிருந்தது. அந்த வல்லமை (ஆவியானவருடைய வரங்களைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்கும் வல்லமை) அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே உரியதாயிருந்தது. சமாரியர்களுக்குப் பிரசங்கித்தலுக்கான புதிய புறப்பாடானது அப்போஸ்தலர்கள் அவ்விடம் வந்து சேரப் போதிய முக்கியத்துவம் வாய்ந்த காரணமாயிற்று. அவ்வூழியத்தில் திருப்தியுற்ற யோவானும் பேதுருவும் அங்கு சென்று (புதிதாய்) மனம் மாற்றப்பட்டவர்கள் ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள்மீது தங்கள் கைகளை வைத்து ஜெபித்தனர். சீமோன் முன்பு கொண்டிருந்த அதிகார விருப்பமானது மீண்டும் திரும்பி வந்தது, அவன், பரிசுத்த ஆவியானவருடைய வரங்களைப் பொழிவதற் கான வல்லமையை பெறும் நோக்கத்துடன் அதற்காகப் பேதுருவுக்குப் பணம் கொடுக்க முன் வந்து, தனது பாவங்களுக்காக அப்போஸ்தலரின் கடினமான கடிந்து கொள்ளுதலைப் பெற்றான். இன்றைய நாள் வரையிலும் கூட, பிரசங்க/போதனைப் பணிகளை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி செய்தல் என்பது இந்த சீமோனின் நினைவாக simony என்றே அழைக்கப்படுகின்றன.

**2. மந்திரியின் மனமாற்றம்** *(8:26-40).*—எத்தியோப்பிய அரசியாயிருந்த கந்தாகேயின் பொக்கிஷத்தார் எருசலேமுக்குப் புனிதப் பயணம் சென்று விட்டு, தம் இல்லம் நோக்கித் திரும்பப் பயணம் செய்து கொண்டிருந்தார். பிலிப்பு காசா செல்லும் திசை நோக்கி தேவனால் அனுப்பப்பட்டார். அவர்களின் பாதைகள் சந்திக்கின்றன. ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்திலிருந்து வாசித்துக் கொண்டிருந்த அந்த அலுவலர், பிலிப்புவைத் தன்னுடன் பயணம் செல்லும்படியும், தீர்க்கதரிசனத்தைத் தனக்கு விளக்கும்படியும் அழைக்கின்றார். பிலிப்பு அவருக்கு இயேசுவைப் பற்றிப் பிரசங்கிக்கின்றார். அதன் விளைவாக அந்த மந்திரி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்கின்றார். இரதம் நிற்கிறது, இருவரும் வழியில் இருந்த ஒரு சிறு குட்டையில் இறங்குகின்றனர், மனம் மாறிய அவரைப் பிலிப்பு ஞானஸ்நானப்படுத்துகின்றார். அவர் தமக்குள் புதிதாய்த் தோற்றுவிக்கப்பட்ட விசுவாசத்தில் அகம் மகிழ்ந்தவராய்ச் செல்லுகின்றார். அவர் ஒரு புறஜாதியாராய் இருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. அப்படியிருந்தால், இது புறஜாதி உலகத்தாருக்கான தனிப்பட்ட மாற்றமாக இருந்தது, மற்றும் இது குடியிருப்பற்ற பகுதியில் நடைபெற்றதால் எருசலேமில் கவனத்தைக் கவரவில்லை, மற்றும் சமூக உறவுகள் எதையும் உள்ளடக்கவில்லை, இது அச்சமயத்தில் எருசலேமில் அறியப்பட்டிருக்கக் கூட முடிந்திராது. அவர் (மந்திரி) பெரும்பாலும் ஒரு கிரேக்க யூதராயிருந்து, நெகேமியாவைப் போல் புறஜாதியாருடைய நாட்டில் உயர் பதவி வகித்திருக்கலாம். பிலிப்பு, செசரியாவுக்கு கடந்து சென்றார், அங்கு நாம் அவரைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்திப்போம்.

***3. சவுலின் மனமாற்றமும் தொடக்க கால ஊழியமும்*** *(9:1-30).—* *பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் கிறிஸ்தவத்தின் வரலாற்றில் சவுலின் மனமாற்றம் மிகவும் வலிவார்ந்த நிகழ்ச்சியாக இருந்தது. இவ்வரலாறு நமக்கு மும்முறை கூறப்படுகிறது: லூக்காவினால் (அப். 9), யூதக் கூட்டத்தாருக்குப் பவுலினால் (அப். 22), மற்றும் அகிரிப்பாவின் முன்னிலையில் மீண்டும் பவுலினால் (அப். 26). ஆதி சபையின் மீது பவுல் தமது மனப் பதிவுகளை வேறெந்த அப்போஸ்தலரைக் காட்டிலும் அதிகமாய் விட்டுச் சென்றார். லூக்காவின் சுவிசேஷம் மற்றும் நடபடிகள் - இவையிரண்டும் அநேகமாகப் பவுலின் ஏவுதல் மற்றும் இயக்கத்தின் கீழாகவே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் - என்றே நூல்கள் உட்பட புதிய ஏற்பாட்டின் பாதிக்கும் மேலான அளவானது பவுலிடம் இருந்து தோன்றியதாக உள்ளது.*

*நாம் சவுலை (சபைக்கு) மூன்றாவது உபத்திரவம் எழும்பிய வேளையில் எருசலேமில் கண்டதுடன் விட்டு வந்தோம். அந்த உபத்திரவத்தின் மூலகாரணமாய் அவரே விளங்கினார். அவர் தாம் செய்த எல்லாவற்றையும் முழு பெலத்துடனேயே செய்தார். அவருடைய ஊழியமானது சுவிசேஷத்தைப் பிற மையங்களுக்கு அனுப்புதலாயிருக்கும் வரையிலும் தேவன் அவரை ஊழியம் செய்ய அனுமதித்தார்; ஆனால் அவர் தொலைவிலிருந்த தமஸ்குவுக்குத் தமது தீவிரமான சகிப்பின்மையைக் கொண்டு செல்ல நாடிய உடனே தேவன் தம் கரத்தை அவர் மீது வைத்தார். அவரை ஒரு ஊழியராக வும் சாட்சியாகவும் (அப். 26:16), அதாவது ஒரு அப்போஸ்தலராகவும் ஆக்குவதற்காக இயேசு தாமே அவருக்குத் தரிசனமானார்; அவர் (இயேசு) பவுலை பார்வையற்றவராகத் தமஸ்குவுக்கு அனுப்பினார், அங்கு மூன்று நாட்களாக ஜெபத்திலும் உபவாசத்திலும் இருந்த பிறகு அனனியா என்ற சீஷர் மூலம் இன்னும் அறிவுறுத்தப்பட்டு, ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார். கலாத்தியர் முதலாம் அதிகாரத்தில் உள்ள விவரத்தை நடபடிகள் ஒன்பதாம் அதிகாரத்தின் விவரத்துடன் ஒப்பிட்டுக் காணுகையில் நாம், அவர் (பவுல்) உடனடியாக தமஸ்குவில் பிரசங்கிக்கத் தொடங்கியதாக அறிகின்றோம்; பின்பு அவர் அரபு தேசத்தில் மூன்று ஆண்டுகள் சென்றிருந் தார்; தாம் இதற்கு முன்பு எழுப்பியிருந்தது போன்ற உபத்திரவத்தின் புயல் ஒன்றை எதிர்கொள்வதற்காகவே தமஸ்குவுக்குத் திரும்பி வந்தார்; எருசலேமுக்குத் தப்பிச் சென்றார், அங்கு அவர்மீது நம்பிக்கை கொண்டிராத சீஷர்களிடம் பர்னபாவால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்; யூதர்கள் அவருக் கெதிராய்ச் சூழ்ச்சி செய்யத் தொடங்கியது வரையிலும் எருசலேமில் அவர் மிகுந்த தைரியத்துடன் பிரசங்கித்து வந்தார் மற்றும் தேவனிடமிருந்து வந்த ஒரு தரிசனம் (அப். 22:17-21) அவரது சொந்த ஊரான தர்சு நகருக்கு அவரை அனுப்பிற்று. பவுல் எங்கிருந்தாலும் அவர் ஒரு ஊழியக்காரரா கவே இருந்திருக்க வேண்டும்; ஆனால் சில ஆண்டுகளுக்கு மறைவின் திரையொன்று அவரது பிரயாசங்களின்மீது மூடிக் கிடக்கின்றது.*

***4. புறஜாதியாருக்கு மாற்றம்.—அ. பேதுருவின் மூலமாக; கொர்நேலியு வின் மனமாற்றம் (10).—*** *இப்பொழுது நாம் (படிக்கின்ற) வரலாற்றில் ஒரு*

புதிய திருப்புமுனைக்கு வருகின்றோம். சபையானது தான் பிறந்த யூதத்துவ (பழைமைவாதம் என்ற) துணிச்சுற்றுகளை அகற்றி விட்டு வெளியே வர வேண்டியதாயிருந்தது. யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் இடையில் இருந்த இடைவெளியானது, யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையி லிருந்த இடைவெளியைக் காட்டிலும் அகலமானதாகவும் ஆழமான தாகவும் இருந்தது. ஆனால் அதற்குப் பாலம் இடப்பட்டிருந்தது. தேவன் வழக்கமாக மாபெரும் சகாப்தங்களுக்கு இருதயங்களை ஒன்றுக்கொன்று ஏற்புடையதாகும்படியும் அதற்கேற்ற நிகழ்ச்சிகளையும் அமைதியாகவே ஏற்பாடு செய்கின்றார். இங்கும் அப்படித்தான் நடந்தது.

*அ. கொர்நேலியுவைத் தயார் செய்தல்.*—பலஸ்தீனத்தின் அரசியல் தலைநகரான செசரியாவில் கொர்நேலியு என்ற ரோமானிய நூற்றுக்கதிபதி பணியினிமித்தம் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவர் விருத்தசேதனமற்ற புறஜாதியாராயிருந்த போதிலும், அவர் தேவன்மீது விசுவாசமுள்ளவராய், பக்தியுள்ளவராய், நீதிமானாய், தானதர்மம் செய்பவராய் இருந்தார். அவருக்கு இரட்சிப்புக்கேற்ற வழியை அறிவுறுத்தும்படி பேதுருவை அழைப்பிக்க யோப்பா கடற்கரைக்கு ஆளனுப்பி வைக்கும்படி தேவ தரிசனத்தில் அவர் (கொர்நேலியு) கட்டளையிடப்பட்டார்.

*ஆ. பேதுருவைத் தயார் செய்தல்.*—பேதுரு சமாரியாவிலிருந்து எருசலேம் திரும்பியதுடன் நாம் அவரை விட்டு வந்தோம். பிற்பாடு அவரை நாம் லித்தாவில் காண்கின்றோம், அங்கே அவர் ஐநேயாவைக் குணமாக்கு கின்றார். பிறகு, தொற்காள் மரணத்தினிமித்தம் அவர் யோப்பாவுக்கு அழைப்பிக்கப்படுகின்றார். அங்கே அவர் தொற்காளுக்கு உயிர் கொடுக்கின் றார்; மற்றும் இவ்விடத்தில் தான் அவரைக் கொர்நேலியுவின் செய்தியாளர் கள் கண்டனர். ஆனால் பேதுருவும் கூட அந்த நிகழ்ச்சிக்குத் தயாரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அவர் எந்த மனிதரையும் தீட்டும் அசுத்தமும் உள்ளவரென்று அழைக்கக் கூடாதென்று பரலோகத்திலிருந்து வந்த தரிசனம் அவருக்குப் போதித்தது, மற்றும் அவரைக் கொர்நேலியுவினிடத் தில் செல்லும்படி ஆவியானவர் ஆணையிட்டார். கொர்நேலியு தமது வீட்டார், தமது நண்பர்கள் ஆகியோரை ஒன்றுகூட்டி வைத்திருந்தார். பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்து, ஞானஸ்நானத்தின் மூலம் அவர்களை சபையில் ஏற்றுக்கொண்டார்.

*இ. இந்நிகழ்ச்சிக்காகத் தற்காப்பு வாதம் செய்யப்பட்டது.*—இது எருசலேமில் இருந்த மிகவும் கண்டிப்பான யூதக் கிறிஸ்தவர்களுக்குத் திகைப்பூட்டும் நிகழ்ச்சியாய் இருந்தது. விருத்தசேதனமற்ற புறஜாதியாரின் முழு வீட்டாருடனும் மத மற்றும் சமூக உறவுகளில் பிரவேசித்தல் என்பது (மதப்) பண்புக்கான ஒவ்வொரு சட்டத்தையும் மீறுதல் என்பதாயிருந்தது, அவர் (பேதுரு) எருசலேம் திரும்பிய பொழுது அதைப் பற்றிக் கணக்கு ஒப்புவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் தேவன் அவருக்கு ஒரு பதிலைக் கொடுத்திருந்தார். வழக்கமான முறைமைக்கு மாறாக, கொர்நேலியுவின் வீட்டார் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே ஆவியானவர், இயற்கைக்கு மேலான தமது அருட் கொடைகளை அவர்கள்மீது பொழிந்திருந்தார், இது அவர்களை ஏற்றுக்

கொண்டதற்கான தெய்வீக உத்தரவாதமாயிருந்தது. அது "புறஜாதியாரின் பெந்தெகொஸ்தே"யாயிருந்தது; புதிய புறப்படுதலின் மீது தேவனுடைய முத்திரை என்ற வகையில் இது சபையாரால் சந்தோஷம் நிறைந்த வகையில் அங்கீகரிக்கப்பட்டது.

***ஆ. கிரேக்கரானவர்களின் மூலமாக*** *(11:19-30).*—இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், தேவன் தம்முடைய சபையை புறஜாதியார் உலகின் மீதான மிகவும் பரவலான தாக்குதலுக்கு/ செயல்பாட்டிற்கு தயார் செய்து கொண்டிருந்தார். பவுலின் (முந்திய) உபத்திரவத்தினால் சிதறிச் சென்றவர்கள் சுவிசேஷத்தை பெனிக்கியா, சீப்புருத் தீவு, மற்றும் அந்தியோகியா நகரம் வரையிலும் எடுத்துச் சென்றிருந்தனர். முதலில் அவர்கள் யூதர்களுக்கு மட்டும் பிரசங்கித்தார்கள். ஆனால் விரைவிலேயே, கிரேக்கரானவர்கள் இனத்தின் மீதான தடைகள் எல்லாவற்றையும் முறித்துப் போட்டு, புறஜாதியாருக்கு (சுவிசேஷத்தை) பிரசங்கிப்பதாக எருசலேமுக்குச் செய்தி வந்தது. உடனடியாக அவர்கள் அந்தியோகியாவுக்கு அந்நியனாயிருந்த பர்னபாவை அனுப்பி வைத்தனர்.

*அ. ஒரு புதிய நடத்துனரும் ஒரு புதிய மையமும்.*—பர்னபா இந்த ஊழியத்திற்குத் தமது இசைவைத் தெரிவித்ததுடன் நின்று விடவில்லை, ஆனால் சவுலைத் தேடித் தர்சு நகருக்குச் சென்றார். பர்னபாதான் சவுலை எருசலேமிலிருந்த சீஷர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் என்பது நினைவில் வைக்கப்பட்டிருக்கும்; இவர் (பர்னபா) "பவுலை தொடக்கத்தில்/ஆதியில் கண்டு பிடித்தவர்" என்று அழைக்கப்படலாம். கடைசியாக மனிதருக்கு இடமும் இடத்துக்கு மனிதரும் கண்டறியப் படுகின்றன(ர்). அந்தியோகியா நகரானது ஆசியாவின் மக்கள் தொகை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் மாபெரும் மையமாய் இருந்தது; பவுல், சபையில் மிக விசாலமான வலிவு நிறைந்த மனிதராயிருந்தார். அந்தியோகியாவுக்குப் பவுல் வந்து சேர்ந்த பொழுதிலிருந்து பேதுருவும் எருசலேமும் பின்புறத்தில் வீழ்கின்றன(ர்); பவுலும் அந்தியோகியாவும் முன்னணிக்கு வருகின்றன(ர்). ஒரு புதிய மையமும் ஒரு புதிய நடத்துனரும் மேம்படுத்தப் படுகின்றன(ர்), இவ்விரண்டுமே, எருசலேம் மற்றும் அங்கிருந்த நடத்துனர் களைக் காட்டிலும் உலகளாவிய ஊழியத்திற்கு மிகவும் சிறப்பாகப் பொருந்துகின்றன(ர்).

*ஆ. புதிய பெயர்.*—"முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று"[2] என்று தனிச் சிறந்த வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்பெயர் எருசலேமில் தொடங்கப் பட்டிருக்க முடிவதென்பது மிகவும் அரிது. அங்கு சீஷர்கள் யாவரும் யூதர் களாய் இருந்தனர், அவர்கள் மற்ற யூதரிலிருந்து மிக அரிதாகவே புறஜாதி யாரால் பிரித்தறியப்பட்டனர். அந்தியோகியாவில் சீஷர்களின் அமைப் பானது புறதெய்வ வழிபாட்டு மக்கள் தொகையிலிருந்து வந்து சேர்ந்ததா யிருந்தது. அவர்கள், யூதர் மற்றும் புறதெய்வ வழிபாட்டுக்காரர் ஆகிய இருசாராரிடத்திலிருந்தும் அடிப்படையிலேயே மாறுபட்டவர்களா யிருந்தனர். (கிறிஸ்தவர் என்ற) இப்பெயரானது அவசியமானதாகவும், ஏற்புடையதாகவும் இருந்தது.

***5. யூதர்களின் நான்காவது உபத்திரவம்.***—பவுலின் ஊழியப் பயணத்தை நூல் பிடித்துப் பின் தொடரு முன்பு லூக்கா, எருசலேமின் நடவடிக்கைகளின் இன்னுமொரு சிறு குறிப்பை நமக்குத் தருகின்றார். பெத்லகேமில் (இயேசு பிறந்த வேளையில்) சிறு குழந்தைகளை கொலை செய்வித்திருந்த ஏரோதுவின் பேரனும், யோவான் ஸ்நானனின் தலையை வெட்டி வீழ்த்திய ஏரோதின் உறவினனுமாகிய முதலாம் ஏரோது அகிரிப்பா என்பவன் ஏரோதியப் பாரம்பரியத்திற்கு உண்மையாயிருக்கும் வகையில் இரத்தம் சிந்தும் துன்புறுத்துதல் ஒன்றைத் தொடங்கினான். அப்போஸ்தல ரான யாக்கோபு தனது பாடுகளின் (ஞான)ஸ்நானத்தை தாம் இரத்த சாட்சியாய் மரிப்பதில் கண்டார் (மத். 20:22). அதே போன்றதொரு முடிவிற்காக பேதுரு சிறையில் காத்திருந்தார், ஆனால் சபையாரின் ஜெபம் மற்றும் தேவ தூதரின் ஊழியம் ஆகியவற்றின் மூலமாக அவர் விடுவிக்கப் பட்டு, பல ஆண்டுகள் பிரயாசப்படுவதற்காக மீட்கப்பட்டார். ஏரோது கேவலமான வியாதியொன்றினால் (கி.பி. 44ல்) மரித்தான்; ஆனால் "தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று."[3]

---

குறிப்புகள்

[1]அப். 2ல் பெந்தெகொஸ்தேயன்று நடந்த அற்புதங்களை மறுகண்ணோட்ட மிடவும். [2]அப். 11:26. [3]அப். 12:24.